விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 222 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 13 வெள்ளிக்கிழமை (29.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# நீதி, சட்ட ஆட்சியை நிலைநிறுத்துக

## பிரதமரிடம் அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)
நீதி மற்றும் சட்ட ஆட்சியை நிலைநிறுத்துவது அவசியமாகும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன விடம் தெரிவித்தார்.
(11ஆம் பக்கம் பார்க்க)

## சமூக செயற்பாட்டாளர் பதும் கேர்ணர் கைது

(கொழும்பு)
சமூக செயற்பாட்டாளர் பதும் கேர்ணர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.
அண்மையில் பத்தரமுல்ல - பொல்துவ சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பான விசாரணைகளுக்காகக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வருகை தந்திருந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார்.
கொழும்பு குற்றத் தடுப் 11

## போராட்டக்காரர்கள் 21 பேர் வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஒளிபரப்புச் சேவைகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட "கோட்டா கோ கம" போராட்டச் செயற்பாட்டாளர் 11

### சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில்

## சுதந்திரக் கட்சியின் யோசனைக்கு ஜனாதிபதியிடம் சாதகமான பதில்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)
சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த யோசனைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சாதகமான பதில் கிடைத்துள்ளதாக அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் 11

### ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல்

## QR முறையில் மாத்திரமே எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் QR முறைமையின் கீழ் மாத்திரம் எரிபொருளை விநியோகிக்குமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளினால் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அறியப்படுத்தப்பட்டுள்ளது.
மேலும் பொதுப்போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்காக எரிபொருள் 11

### 3ஆம் திகதிவரை

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)
அரசியலமைப்பின்படி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய இலங்கையின் பாராளுமன்ற கூட்டத்தொடரை நேற்று நள்ளிரவுடன் நடைமுறை 11

## ஆற்றல்மிக்க நிர்வாகிகளை வடக்கு ஆளுநர் பழிவாங்குகிறார்

### பொது அமைப்புகள் கடும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் நடவடிக்கைகளால் வடக்கு மாகாண அரச நிர்வாகம் குழம்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாணப் பொது அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.
வடக்கு மாகாண நிர்வாக சேவையில் ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்களை தனது சுயநலனுக்காக ஆளுநர் ஜீவன் தியாகராஜா பழிவாங்குவதாகும் அவரின் இந்த பழிவாங்கல் நடவடிக்கை வடக்கு மாகாண கட்டமைப்பைக் குலைக் 11

## கொரோனா +131 தொற்று

(கொழும்பு)
கொரோனா தொற்று உறுதியான மேலும் 131 பேர் நேற்று அடையாளம் 11

## தேர்தலுக்கு அழைப்பதே மிகவும் பொருத்தமானது

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மகா சங்கத்தினர் தெரிவிப்பு

(கொழும்பு)
நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலுக்கு அழைப்பதே பொருத்தமானது என தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மகா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.
இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மல்வத்து மகாநாயக்கர் வணக்கத்திற்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த 11

## ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்ப செயற்படுதல் தொடர்பில்

### ஜனாதிபதியுடன் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கலந்துரையாடல்



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்ப செயற்படல் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடியதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர்சாரா ஹல்டன் தெரிவித்துள் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்று அதிகாரம் பிரச்சினைகளுக்கு மூலகாரணி

# வடக்கு மக்கள் செய்ததை தெற்கு மக்கள் செய்ய வேண்டாம்

## சபையில் எரான் விக்கிரமரத்ன



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அனைத்து பிரச்சினைகளுக்கும் மூல காரணியாக உள்ளது. அவசரகால சட்டத்தை பயன்படுத்தி அன்று வடக்கு மக்களுக்கு செய்ததை இன்று தெற்கு மக்களுக்கு செய்ய முற்பட வேண்டாம்.

போராட்டத்தை தவறாக சித்தரிப்பதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,போராட்டம் மற்றும் போராட்டக்காரர்கள் தொடர்பில் தற்போது மாறுபட்ட கருத்துக்கள் குறிப் பிடப்பிடப்படுகிறது.

போராட்டத்தை தவறான முறையில் சித்தரித்து முன்னோக்கி செல்வதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சட்டத்திற்கு முரணாக செயற்படுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். முறைமை மாற்றம் (சிஷ்டம் சேன்ஜ்) போராட்டத்தில் ஈடுப் படுபவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பாராளுமன்றமும் முழுமையாக மாற்றமடைய வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் ஜனாதிபதி மாளிகையில் உள்ள நீச்சல் தடாகத்தில் குளித்தமை தவறானது என ஆளும் தரப்பினர் பிரதம கொறடா குறிப்பிட்டார். அவ்வாறாயின் கப்பம் பெறல், மண் அகழ்தல், காடழித்தல் உள்ளிட்ட விடயங்கள் குற்றமில்லையா? மறுபுறம் போராட்டகாரர்கள் ஒழுக்கமற்ற வகையில் செயற்படுகிறார்கள் எனவும் குறிப்பிட்டார். நாட்டு மக்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒழுக்கத்தை பற்றி கேள்வி கேட்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சகல பிரச்சினைகளுக்கும் பிரதான காரணியாக உள்ளது. அவசரகால சட்டத்தை பயன்படுத்தி வடக்கு மக்களுக்கு செய்ததை தற்போது தெற்கு மக்களுக்கு செய்ய முற்பட கூடாது என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

# இலங்கைக்கு ஜப்பான் முழுமையாக ஒத்துழைப்பு

### போக்குவரத்து அமைச்சரிடம் ஜப்பான் தூதுவர் உறுதி



பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கு ஜப்பான் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் போக்குவரத்து அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று போக்குவரத்து அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்படி உறுதியை அளித்துள்ளார். (ம-7)

# பொதுஜன பெரமுனவில் பிளவு இல்லை; சதி உள்ளது

### பெரமுன செயலாளர் சாகர காரியவசம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பிளவுகள் இல்லை, ஆனால் சதி உள்ளது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிணைப்பை நம்பியவர்கள் மீண்டும் எழுச்சி பெறும் நாள் என்று தாம் நம்புவதாகவும், நாட்டை நேசிக்கும் மக்கள் ஒருமுறை வருவார்கள் என நம்புவதாகவும் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

"இந்த நாட்டின் தேசிய சக்தியை பிரதிநிதித்துவப்படுத்திய ராஜபக்ஷக்கள் இன்று இந்த தேசிய சக்திக்கு கடுமையான அடி கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிறுவ வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டின் பலம் வாய்ந்த அரசியல் கட்சியாக இந்த முயற்சிகளில் ஈடுபடும்" என்று அவர் கூறினார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவராசா செல்வமலர் (மலர்)



தண்ணீர்த்தாழ்வு கட்டுவனை பிறப்பிடமாகவும் இன்னாவத்தை கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா செல்வமலர் அவர்கள் நேற்று (28.07.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வைரமுத்து சிவராசாவின் (இளைப்பாறிய பிரதி அதிபர் - யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி) அன்பு மனைவியும் ரகுவர்மன், ராகுலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.07.2022) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 12.30 மணியளவில் கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை. (12288)

[illegible] 075 [illegible], 075 806 3889

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் யாழ். மாநகர சபை மருத்துவருமான Dr. கணேசன் அவர்களின் அன்புத் தாயார்

**சபாரத்தினம் மகேஸ்வரி**

மண்ணில் : 04.02.1935
விண்ணில் : 27.07.2022

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (12285)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்

## 23 ஆம் ஆண்டு நீங்கா நினைவு!



**கலாநிதி நீலன் திருச்செல்வம் MP**


தோற்றம் 31.01.1944 மறைவு 29.07.1999

தன்னலமற்றுப் பணிபுரிந்த அமரரின் சேவையை என்றும் மறவோம்! (C-4670)

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில்
ச. அரவிந்தன், தங்க. முகுந்தன்
(முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பெற நாள் ஒதுக்கீடு கோரி வவு. மருத்துவமனை பணியாளர்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட மருத்துவமனை சுகாதார பணியாளர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார பணியாளர்களுக்கென விசேட தினத்தில் தனியொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்க வேண்டும் என கோரியே இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மருத்துவமனை பணியாளர்களுக்காக விசேட தினத்தில் தனியொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளினை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும் இச்செயற்பாடானது கடந்த சில நாட்களாக நிறுத்தப்பட்டதுடன், பொதுமக்களின் வரிசையின் ஊடாகவே எரிபொருளினை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமது கடமைக்கு உரிய நேரத்திற்கு செல்வதில் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இந்நிலை மாற்றப்பட்டு தமக்கென தனியான ஒரு தினத்தில் எரிபொருள் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படவதுடன் இந்நிலை தொடருமாயின் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (4-299)

# கிளிநொச்சியில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்று

(தருமபுரம்)

தற்பொழுது நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலத்துக்குள் 07 ஏழு பேர் கொரோனாத் தொற்று காரணமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 72 வயதுடைய ஒருவர் மரணித்துள்ளார்.

மரணித்தவர் இதுவரையில் தடுப்பூசியினைபெற்றுக் கொள்ளாதவர் என சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் இனி வரும் நாட்களில் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்கள் குறிப்பாக தற்பொழுது எரிபொருள் நிரப்பு நிலையம் அதிகமான மக்கள் ஒன்றுகூடும் இடமாக உள்ளதால் அனைத்து இடங்களிலும் சுகாதார நடைமுறைகளை மீண்டும் கடைப்பிடிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி என். சரவணன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 4 ஆம் கட்ட கொரோனா தடுப்பூசியினை விரைவில் பெற்றுக்கொள்ள மக்கள் அருகிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரியினை தொடர்பு கொள்ளவும் எனவும் தெரிவித்தார். (4-316)

# ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் நிறைவு செய்த நபர்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் முடித்துக்கொண்ட சம்பவம் பருத்தித்துறை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் நேற்று இடம்பெற்றது.

எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்த ஒருவர் தமது விரதத்தை வீதியில் முடித்துக் கொண்ட புகைப்படம் சமூக ஊடகங்களில் வைரலாகிறது. (4-104)



# உரும்பிராய் காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(குப்பிழான்)

உரும்பிராய்காமாட்சிஅம்பாள் என அழைக்கப்படும் ஸ்ரீ காளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெற உள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்த உற்சவமும் அன்றையதினம் மாலை 4.30 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

# மூன்றாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினால் எதிர்வரும் ஓகஸ்ட் 03 ஆம் திகதி காலை 9 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மூன்றாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு நடத்தப்படவுள்ளது.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா, "தமிழில் நவீனவயவாக்கத்திற்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார்.

"ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும்" என்னும் கருப்பொருளில் நடைபெறவுள்ள ஆய்வரங்குகளில் இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட ஈழத் தமிழ் இலக்கியம், இலக்கணம், கலைகள், சமயம், அறிவியல் முதலான பல்வேறு தலைப்புக்களில் ஆய்வாளர்கள் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். (4)

# காரைநகர் குடிநீர் அபிவிருத்தி சபையினர் பணிப்பகிஷ்கரிப்பு

(அராலி)

டீசல் இன்மையால் காரைநகர் குடிநீர் அபிவிருத்திச் சபையினர் இன்றிலிருந்து டீசல் கிடைக்கும் வரை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதுடன் வலந்தையில் உள்ள வீதி வளைவிற்கு முன்னால் கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த 17 ஆண்டுகளாக காரைநகர் பகுதி முழுவதும் குடிநீர் விநியோகத்தில் ஈடுபடுகின்றோம். இந்த நிலையில் அண்மைக் காலமாக ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியின் போது அரசாங்க அதிபர் மற்றும் காரைநகர் பிரதேச செயலரின் பரிந்துரை மூலம் காரைநகர் இ.போ.ச. டிப்போவால் எமக்கு சீரான எரிபொருள் விநியோகம் நடைபெற்றது.

ஆனால் ,இனிமேல் எமக்கு எரிபொருளை வழங்க முடியாது என டிப்போ அறிவித்துள்ளது. ஆகையால் நாங்கள் சீரான குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, உரியவர்கள் இந்த நிலையை கருத்திற் கொண்டு எமக்கான எரிபொருளை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என தெரிவித்தார். (4-104)

# இருவேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மூவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளில் துவிச்சக்கர வண்டியை திருடிய சந்தேகத்தில் இரண்டு சந்தேக நபர்களும் அதே பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரும் தருமபுரம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் அத்துடன் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபரிடமிருந்து 72 லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்திக்குபயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி D.M. சதுரங்க தெரிவித்துள்ளனர். (4-316-315)

# ஹெரோயினுடன் இருவர் கைது


(சாவகச்சேரி)


கொடிகாமம் நகரப்பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த இரு சகோதரர்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டு கொடிகாமப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களிடம் இருந்து 210 மில்லிக் கிராம் எடை கொண்ட மூன்று சிறிய ஹெரோயின் பொட்டலங்கள் மீட்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் கச்சாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த 31 மற்றும் 24 வயதுடைய சகோதரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)





அபிஷேகக் கந்தன் எனப் போற்றிச் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் காம்யோற்சவப் பெருவிழாவின் தீர்த்தத்திருவிழா ஆடி அமாவாசை நன்னாளான நேற்று வியாழக்கிழமை காலை கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்-ரவிசாந், சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

## 14 ஆவது தகுதிகாண் போட்டியில்

## டிறைற்றேன் அணி வெற்றி

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் டிறைற்றேன் அணி, பற்றீசியன்ஸ் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.



முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 26.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

டிலக்ஸன் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் டிறைற்றேன் அணி சார்பாக 8 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், உதயசாந் 9 ஓவர்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டிறைற்றேன் அணி 36.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

பரணிகன் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களையும் துவாராகன் 28 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் அணி சார்பாக டெஸ்வின் 6 ஓவர்களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) டிறைற்றேன் அணி 7.50 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 1.68 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (4)

# தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் இருபது-20

## இங்கிலாந்து வெற்றி

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 41 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பிரிஸ்டோல் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 234 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாத, ஜோனி பேயர்ஸ்டொவ் 90 ஓட்டங்களையும் மொயின் அலி 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், லுங்கி ங்கிடி 5 விக்கெட்டுகளையும் பெலுக்வாயோ 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 235 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 193 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 41 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரிஸ்டன் ஸ்டுப்ஸ் 72 ஓட்டங்களையும் ரீஸா ஹென்ரிக்ஸ் 57 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ரிச்சட் க்ளீஸன் 3 விக்கெட்டுகளையும் ரீஸ் டொப்லே மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மொயின் அலி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 52 ஓட்டங்களையும் 1 விக்கெட்டினையும் வீழ்த்திய மொயின் அலி தெரிவு செய்யப்பட்டார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2674

**கந்தன்**

சில நேரங்களில் சில மனிதர்களின் செயல்களை கண்டு ஆத்திரப்படுவதை விட அமைதியாக சென்று விடுவது நல்லது.

**பவிஷ்தா**


ஏழு கழுதை வயசானாலும் ஏரொ பிளேன் சவுண்டு கேட்டா



மேல பாத்தா தான் மனசுக்கு திருப்தியா இருக்கு.

**ரூபன்**

அப்பா வண்டி சாவி எடுத்த உடனே பிள்ளைகளின் ரியாக்சன் இதுதான்



**ஐங்கரன்**

வயசு முப்பது ஆக போகுதுடா இப்பவும் ஒரு நாள் எனக்கு புடிச்ச மாதிரி என் Life மாறும்னு சொல்லி சுத்துறான்டா. யாருடா? வேற யாரு நான் தான்.

**மேனகா**

2K Kids- நாங்க வீட்டுக்கே தெரியாம Secret ஆ Love பண்ணுவோம் தெரியுமா?



90's Kids - அந்த பொண்ணுக்கே தெரியாம LOve பண்ணி காட்டவா?

**பிரசாத்**



தேவையில்லாததை தேவையாக நினைப்பதால் தான் தேவையானது தேவையில்லாததாக ஆகிவிடுகிறது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஆட்சிக்கு வந்தாலும் நெருக்கடி உடனே தீராது

## எரான் விக்ரமரத்ன

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் குறித்து சர்வதேச ரீதியில் நம்பிக்கை ஏற்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நிரந்தரமான அரசியல் பலம் இல்லாத உண்மையான மக்கள் ஆணையை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசாங்கம் சம்பந்தமாக மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படாது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் அல்லது மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தி மக்கள் எதிர்பார்க்கும் விதத்திலான அரசாங்கம் உருவாக இடமளிக்க வேண்டும்.

தேர்தலில் யார் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டில் நிலவும் நெருக்கடியை தீர்ப்பதற்கு மேலும் பல காலம் செல்லும். அத்துடன் நெருக்கடிக்கு தீர்வுகான ஜனரஞ்சகமற்ற சில தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார். (நி)

## போலி இலக்கத்தகடு பொருத்தி எரிபொருள் பெற முயன்றவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்

(கொழும்பு)

போலி இலக்கத்தகடு பொருத்தி வாகனத்திற்கு எரிபொருள் பெற முயன்ற ஒருவருக்கு நீதிமன்றம் ரூபா 25,000 அபராதம் விதித்துள்ளது.

வீரகுள-நெல்லிகஹமுல பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சிறிய லொறியில் போலி இலக்கத்தகடு பொருத்தி டீசல் பெற முற்பட்ட லொறி சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவருக்கு கம்பஹா நீதிவான் மஞ்சுள கருணாரத்ன ரூபா 25,000 அபராதம் விதித்தார். (நி)

## பதுளை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் துப்பாக்கிச் சூடு

(பதுளை)

பதுளை - பசறை பிரதான வீதியில் ஹிந்தகொட பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனப் பதுளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியருக்கும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வந்த நபருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தகராறினால், எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வந்த நபர் 9 மி.மி ரகத் துப்பாக்கியால் வானத்தை நோக்கி நான்கு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

எவருக்கும் எந்தவிதமான காயங்கள் ஏற்படாத போதிலும் சந்தேகநபரைக் கைது செய்யும் வகையில் விசாரணைகளைப் பதுளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

# தேர்தலை விரைவாக நடத்துங்கள்

## முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்து



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணை தோல்வியடைந்துள்ளதால், விரைவில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெற வேண்டும் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜனநாயகத்துக்காக பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், செலவு செய்வதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை அதற்கு உதாரணம். தேர்தலை நடத்த ஆயிரத்து 200 கோடி ரூபாய்களே செலவாகும். இத்தொகையை 600 கோடிகளாகச் சுருக்கித் தேர்தலை நடத்தவும் முடியும்.

எந்தவொரு கொடுப்பனவையும்பெறாமல்தேர்தல்கடமையைச் செய்யத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர்" என அவர் தெரிவித்தார். (நி)

# போக்குவரத்து நெருக்கடி காரணமாக வியாழக்கிழமைகளில் உபதபாலகங்கள் இயங்காது

## தபால்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து உப தபால் அலுவலகங்களும் வியாழக்கிழமை மூடப்படவுள்ளன. நிலவும் போக்குவரத்து நெருக்கடிகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மறுஅறிவித்தல் வரை அனைத்து உப தபால் அலுவலகங்களும் திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை திறக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் நிலையங்கள் திங்கட்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும் என்பதுடன் செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை திறக்கப்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கோட்டா நியமித்த கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு கலைப்பு

(கொழும்பு)

இலங்கையில் கல்வி மேம்பாடு, விரிவாக்கம் மற்றும் நவீன மயப்படுத்தலுக்கான பரிந்துரைகளுக்கென முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் கே. ஆர். பத்மப்பிரிய இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

ஆட்சி மாற்றத்தின் பின், முன்னாள் ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் ஆணைக் குழுக்களின் உயர் பதவிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக அரச உயர்மட்டத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# இராசிபலன்

29.07.2022
ஆடி 13, வெள்ளிக்கிழமை
பிரதமை பின்னிரவு 1.24 மணிவரை
பூசம் முற்பகல் 10.44 மணி வரை

சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்




வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.




தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்ப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் இடம் பெறலாம், போசன நன்மையுண்டு.




உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், தொழில் முயற்சிக்கு புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




உள்ளொன்று வைத்து புறமொன்றை பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும்.




பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.





திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம்.




வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

உலகத்தில் [illegible] அனுபவம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# சரியான அடி!



நாலு காசு, சம்பாதித்துக் கொண்டு ஊருக்குப் போய் முத்தாயியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான்.

கிழவியும் "அப்படியானால் நீ என்னிடமே வேலை செய், வேலை செய்யும் வரை சாப்பாடு போட்டு வருட முடிவில் உன் சம்பளத்தை மொத்தமாகக் கொடுக்கிறேன்" என்றாள். கந்தனும் அதற்குச் சம்மதித்து அங்கே வேலை செய்யலானான்.

ஒரு வருடம் கழிந்தது. கந்தன் கிழவியின் வீட்டு ஆடு, மாடுகளை மேய்த்தும் அவற்றிற்குத் தீவனம் வைத்தும், பால் கறந்தும், தோட்டத்தில் காய் கறிகளைப் பயிரிட்டும், காட்டிலிருந்து விறகு வெட்டிக் கொண்டு வந்தும் மிகுந்த அக்கறையுடன் வேலைகளைச் செய்து வந்தான்.

வருட முடிவில் கிழவி "நீ வருடம் பூராகவும் நன்றாக வேலை செய்தாய். உனக்கு சம்பளத்திற்குப் பதிலாக இந்தக் கழுதையைக் கொடுக்கிறேன். இது சாதாரண கழுதை இல்லை. இதன் இரண்டு காதுகளையும் பிடித்து உலுக்கினால் இது ஹி! ஹி! என்று கனைத்தவாறே முத்துக்களையும் இரத்தினங்களையும் உதிர்க்கும். அவற்றைக் கொண்டு நீ சுகமாக வாழலாம்" என்றாள்.

கந்தனும் கழுதையின் காதைப் பிடித்து உலுக்கவே அது முத்துக்களையும் இரத்தினங்களையும் உதிர்த்தது. அது கண்டு மகிழ்ந்து அவன் அதை ஓட்டிக் கொண்டு கிழவியிடம் விடை பெற்றுக் கொண்டு தன் ஊருக்குக் கிளம்பினான்.

வழியில் ஒரு கிராமத்தில் ஒரு ஊட்டுப் பிறை வைத்து நடத்தும் ஒரு கிழவியின் வீட்டில் இரவில் தங்கி தன் கழுதையை அவ் வீட்டின் கொல்லைப் புறத்தில் கட்டினான்.

கிழவி சாப்பாட்டிற்கும் தங்குவதற்கும் பணம் கேட்கவே "இரு. இதோ கொண்டு வருகிறேன்" எனக் கூறி வீட்டின் பின்புறம் சென்றான்.

(தொடரும்...)

# சிலப்பதிகாரம்

## மாதவிப் பெண் மயிலாள்




மாசாத்துவானின் மகனே தன் வலையில் விழுவான் என்று மாதவியின் தாய் எதிர்பார்க்கவே இல்லை. அள்ள அள்ளக் குறையாத செல்வம் படைத்த கோவலன் தன் மகளின் அழகில் வீழ்ந்தவுடன், ஒரு திருப்தியான புன்னகை செய்து கொண்டாள் அவள். மாதவியின் அழகில் அவன் பிரமித்ததையும், தன்னையும் அறியாமல் அவள் இடையைத் தொட்டதையும் அவள் கவனிக்காமல் இல்லை.

உடனே, அவள் தனது பணிப் பெண்ணைப் பார்த்துக் கண் ஜாடை செய்தாள். அவர்கள் கோவலனையும் மாதவியையும் தனிமையில் விட்டு வெளியேறினார்கள். அறைக் கதவை மென்மையாகச் சாத்தினார்கள்.

'விருந்தினர்கள் என்ன கேட்டாலும் தருவது தான் நம் பண்பு'. பணிப் பெண்ணிடம் சொல்வது போல சற்று உரக்கவே சொன்னாள் மாதவியின் தாய்.

விலகிப்போன மாதவியின் கையைப் பிடித்தான் கோவலன். அவள் நாணத்தில் தலை கவிழ்ந்தாள்.

கோவலன் வலக்கையால் அவள் தாடையைப் பிடித்து தலையை நிமிர்த்தினான். இடக்கையால் அவள் இடையை வளைத்து அருகில் இழுத்தான்.

முகத்தில் வந்த நாணத்தைக் கைகளால் மறைக்க முடியாத நெருக்கம்.

சட்டென்று முகத்தைக் கோவலனின் மார்பிலேயே புதைத்து மறைத்தாள் மாதவி. கைகளால் அவனைத் தழுவிக் கொண்டாள்.

அந்த அணைப்பில் கோவலனுக்கு எல்லாம் மறந்து போனது. பெரும் சிறப்பு மிக்க தனது குடும்பம், தனது பெருமை, அவனுக்கே உரித்தானவளான அன்பு மனைவி கண்ணகி எல்லாம் எல்லாமே...!

கோவலன் பிரிந்ததிலிருந்து, கண்ணகிக்கு மாலைப்பொழுது ஏன் வருகிறது என்று இருந்தது. முகத்தில் வியர்வைத் துளிகள் தோன்றுவதே இல்லை என்றாலும் நிலவு போன்ற அவள் முகம் ஒளி குன்றியே இருந்தது.

காரணம் அந்த வியர்வைத் துளிகள் அவள் கோவலனுடன் உறவு கொள்கிற போது தோன்றுபவை ஆயிற்றே! நெற்றியில் மங்கலத்துக்கு அடையாளமாக இடும் பொட்டைத் தவிர வேறு எந்த அலங்காரமும் அணிகலன்களும் இன்றி வாடிய பூ மாதிரி இருந்தாள் கண்ணகி.

ஆனால், மாதவியின் படுக்கை அறையில் மேகலையின் ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது. மலர் மஞ்சமாக இருந்தாலும் மாதவிக்கு இன்ப உறவுகள் வியர்வையைத் தந்தன.

ஒவ்வொரு முறையும் அவள் தன் ஒப்பனையைத் திருத்திக் கொண்டாள்.

விரைவில் வரவிருக்கிற இந்திர விழா தங்கள் இன்ப மாலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இருப்பது தெரியாமல் இன்பத்தில் திளைத்திருந்தான் கோவலன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 39

**உக்ரைன், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகியவற்றிற்கான பாதுகாப்பு உறுதிப்பாட்டை உறுதிப்படுத்த டிசெம்பர் 5, 1994 அன்று பாதுகாப்பு உத்தரவாதங்கள் குறித்த புடாபெஸ்ட் குறிப்பாணையில் கையெழுத்திட்டன.**

உக்ரைனின் இறையாண்மை மற்றும் தற்போதுள்ள எல்லைகளுக்கு மதிப்பளிப்பதாக நாடுகள் உறுதியளித்தன. பெலாரஸ் மற்றும் கஜகஸ்தானுக்கும் இணையான குறிப்பாணைகள் கையெழுத்திடப்பட்டன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, டிசெம்பர் 5, 1994 அன்று உக்ரைன் அதிகாரபூர்வமாக NPTயை அணு ஆயுதம் அல்லாத நாடாக ஏற்றுக்கொண்டது.

அந்த நடவடிக்கை START இன் ஒப்புதலுக்கான இறுதி நிபந்தனையை பூர்த்தி செய்தது. அதே நாளில், ஐந்து START நாடுகள் ஒப்புதலுக்கான கருவிகளை பரிமாறி, ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தன.

**2009 ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் கூட்டு பிரகடனம்**

ரஷ்யாவும் அமெரிக்காவும் 2009 இல் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டன. அதில் 1994 புடாபெஸ்ட் குறிப்பாணையில் செய்யப்பட்ட பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஆனது START 2009 இல் காலாவதியான பிறகும் செல்லுபடியாகும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**ஆனால் நடந்தது என்ன?**

2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 2022 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை: உக்ரைனின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகளில் 150,000 இராணுவ வீரர்களை உள்ளடக்கிய "இராணுவப் பயிற்சிகளில்" ஈடுபட்டது.

பெப்ரவரி 24, 2022: ரஷ்யா, உக்ரைனின் நகரங்கள், விமான நிலையங்கள் மற்றும் நாட்டின் பெரும்பகுதியில் உள்ள இராணுவ உட்கட்டமைப்புகள் மீது விமானங்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களுடன் பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலையும் படையெடுப்பையும் தொடங்கியது.

**ரஷ்யாவும் உக்ரைனும் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருந்தாலும் இவற்றை மீறி மார்ச் 18, 2014 இல் ரஷ்யா உக்ரைனின் கிரிமியன் தீபகற்பத்தை இணைத்துக் கொண்டது மற்றும் உக்ரைனின் கிழக்கு லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் மாகாணங்களில் பிரிவினைவாத சக்திகளால் நடந்து வரும் கிளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கத் தொடங்கியது.**

**ஆரம்ப காலத்தில் உக்ரைனின் வெளிநாட்டு உறவுகள்**

உக்ரைனின் மற்ற அண்டை நாடுகளுடனான உறவுகள் மிகவும் சுமுகமாக இருந்தன. ஹங்கேரியுடனான உறவுகள் ஆரம்பத்திலிருந்தே நட்பாகவே இருந்தன. முந்தைய நூற்றாண்டுகளின் கொடுமைகள் இருந்தபோதிலும், போலந்து உக்ரைனிய சுதந்திரத்திற்கும் ஆதரவாக இருந்தது. 1999 முதல் 2005 வரை GUAM (ஜார்ஜியா, உக்ரைன், அஜர்பைஜான், மால்டோவா) என அழைக்கப்பட்ட ஒரு தளர்வான துணைப் பிராந்திய அமைப்பை இணைத்து, முன்னாள் சோவியத் யூனியனின் பல நாடுகளுடன் உக்ரைன் உறவை வளர்த்தது.

ருமேனியாவுடனான உறவுகள், வடக்கு புகோவினா மற்றும் தெற்கு பெசராபியா, அத்துடன் பாம்புத் தீவு (Zmiyinyy island) மற்றும் கருங்கடலில் அதைச் சுற்றியுள்ள நீர் உள்ளிட்ட சில உக்ரைனிய பிரதேசங்களுக்கு அந்நாட்டின் (ருமேனியாவின்) உரிமை கோரல்களால் சில சிக்கலாக இருந்தது.

பெலாரஸின் எதேச்சதிகார அரசியல் அமைப்பு மற்றும் ரஷ்யாவுடனான அதன் முன்மொழியப்பட்ட இரு-மாநில ஒன்றியம் ஆகியவை உக்ரைனுடனான பெலாரஸின் நெருங்கிய உறவுகளை சாத்தியமற்றதாக்கியது.

அமெரிக்காவுடனான உக்ரைனின் (சுதந்திரத்திற்கு முன்) உறவுகள் ஆரம்பத்தில் மிகவும் மோசமாக இருந்தன. 1991 கோடையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் உக்ரைன் விஜயத்தின் போது, பல உக்ரைனியர்களை தற்கொலை தேசியவாதிகள் என்று எச்சரித்ததுடன் அவர்களை ரஷ்யாவுக்குள்ளேயே இருக்குமாறு வலியுறுத்தினார்.

அந்த ஆண்டின் பிற்பகுதியில் உக்ரைன் சுதந்திரம் பெற்றபோது, வோஷிங்டன் புதிய நாட்டின் பெரிய அணு ஆயுதக் களஞ்சியத்தைப் பற்றி மிகவும் அக்கறை கொண்டிருந்தது. உக்ரைனின் ஆயுதக்குறைப்பு பிரச்சினையின் தீர்வுக்குப் பிறகுதான் குறிப்பிடத்தக்க உறவுகள் இரு நாடுகளுக்குமிடையே உருவாகத் தொடங்கின.

அதன்பின் விரைவில் உக்ரைன் அமெரிக்க வெளிநாட்டு உதவியைப் பெறும் முக்கிய நாடாகத் திகழ்ந்தது. மேலும் இரு நாடுகளும் வலுவான அரசியல் உறவை வளர்த்துக் கொண்டன.

(தொடரும்)

# கடல் மட்ட உயர்வு
## இரண்டு மடங்காக அதிகரிப்பு
### ஆய்வில் தகவல்

(லண்டன்)

**ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததை விட கடல் மட்டம் மிக வேகமாக உயர்ந்து வருகின்றது என பிரித்தானியாவின் காலநிலை மற்றும் வானிலை அலுவலகத்தின் வருடாந்த அறிக்கை தெரிவிக்கின்றது.**



1990ஆம் ஆண்டு முதல் கடல் மட்டம் சுமார் 16.5 செ.மீ உயர்ந்துள்ளது. ஆனால், உயரும் வீதம் அதிகரித்து வருவதாக வானிலை மையம் கூறுகிறது.

அவை இப்போது ஆண்டுக்கு 3-5.2 மி.மீ அதிகரித்து வருகின்றது. இது கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த அதிகரிப்பு வீதத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, வசந்த காலம் முன்னதாகவே வரப் போகிறது என்றும், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் விரைவாக வளர்ச்சியடையவில்லை என்றும் பாதுகாவலர்கள் எச்சரிக்கின்றனர். (4)

# அரியவகை வைரம்
## ஆபிரிக்காவில் கண்டுபிடிப்பு

(அங்கோலா)

ஆபிரிக்க நாடான அங்கோலாவில் அரியவகை வைரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த லுகாபா டயமண்ட் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "170 கரட் எடை கொண்ட இந்த இளஞ்சிவப்பு நிற வைரமானது The Lulo Rose என்று அழைக்கப்படுகிறது. இது அங்கோலாவின் லுலோ சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய இளஞ்சிவப்பு வைரம் இதுதான்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அங்கோலாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த வைரம், சர்வதேச சந்தையில் அதிக விலைக்கு ஏலத்தில் விற்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 300 ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## சீன தென்கொரிய பேச்சுவார்த்தை வெற்றி

(பீஜிங்)

சீனா தென்கொரியாவுடனான நீண்டகால பொருளாதார பரிமாற்றங்கள் குறித்து மேற்கொண்டு வந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாக சீன செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார பேச்சு வார்த்தைகள் கடந்த 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் பல தடைகள் மற்றும் திருப்தியற்ற பேச்சுவார்த்தைகள் காரணமாக தொடர் தோல்வியை சந்தித்து வந்த நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் ஒரு முடிவினை எட்டியிருந்த போதிலும் அந்த ஒப்பந்தம் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# மியன்மாரில் இராணுவம் கொலைவெறியாட்டம்!
## ஐ.நா.கண்டனம்

(மியன்மார்)

மியன்மாரில் சகாயிங் என்னும் பிராந்தியத்தில் இராணுவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை இராணுவம் சித்திரவதை செய்து கொலை செய்து வருவதாகவும் அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் உடற்பாகங்கள் சிதறிய நிலையில் வெவ்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் இராணுவத்தின் [illegible] கொலைவெறி அம்பலமாகி [illegible] வருவதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் சர்வாதிகார அடக்கு முறைகளுக்கு எதிராக மியன்மாரில் மக்கள் குழு தொடர்ந்தும் போராடி வருகின்ற நிலையில் மேற்படி கொலைச் சம்பவங்கள் இடம் பெறத் தொடங்கியுள்ளமையானது மீண்டும் மனித பேரவலத்தை உருவாக்கப் போகின்றதா என்ற கேள்வியை உருவாக்கியுள்ளதுடன் இராணுவத்தின் இவ்வாறான கொடூரமான செயல்களை வன்மையாக கண்டிப்பதோடு கட்டாயம் நீதி விசாரணைகளுக்குட்படுத்தப்பட வேண்டும். மரண தண்டனைகள் மனித உரிமைகளை மீறும் ஒரு செயல் என்பதை மியன்மார் இராணுவம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் ஐ.நா.வின் மியன்மாருக்கான இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

(கொழும்பு)


**இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன், நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் டெங்கு நோயை பரப்பக்கூடிய நுளம்பு காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையிலும் தீவிரமாக கடிப்பதாக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மூன்று வாரங்களின் பின்னர் திறக்கப்பட்டமையினால், டெங்கு நோய் பரவுவதனை தடுப்பதற்கான வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்றுமாறு பெற்றோர் மற்றும் பொதுமக்களை இலங்கையில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி)

# போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் ஏற்கத்தக்கவை - ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

நாட்டின் அரசமைப்பை மாற்ற வேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களின் கோரிக்கையாக இருந்தது.

அதனை நாமும் ஏற்றுக் கொள்கிறோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் சட்டத்திற்கு அமைவாக அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் அனுமதியுள்ளது என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அதே உரிமை உண்டு என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

மேலும், பல்வேறு திறமைகளைக் கொண்ட இளைஞர்களும் அதில் பங்கேற்றிருந்ததை தாம் கண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்த வேளையில் தான் ஜனாதிபதியாக பதவியேற்றதாக தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார சவாலை முறியடித்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பல நடவடிக்கைகளை தற்போது எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி)

# QR அட்டையைப் பெற

## வர்த்தக நிறுவனங்கள் தமது அனைத்து வாகனங்களையும் பதிவு செய்ய முடியும்

### — எரிசக்தி அமைச்சர் —



(கொழும்பு)

தேசிய எரிபொருள் விநியோக அட்டையை பெறுவதற்காக பல வாகனங்களை கொண்ட வர்த்தக நிறுவனங்கள் தங்களது வர்த்தக பதிவு எண்ணை கொண்டு அனைத்து வாகனங்களையும் பதிவு செய்து கொள்ள முடியும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இயந்திரங்களுக்குத் தேவையான வாராந்த எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஊழியர்களுக்கு கொரோனா ராகம புகையிரத நிலையம் பூட்டு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று பரவல் நிலை உயர்வடைந்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் கொரோனா வைரஸ் காரணமாக ராகம ரயில் நிலையத்தின் கட்டண சீட்டுக்களை வழங்கும் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அந்த ரயில் நிலையத்தின் அதிபருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்தே கட்டண சீட்டுக்களை வழங்கும் நிலையத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ராகம ரயில் நிலையத்தின் ஊழியர்கள் பலருக்கும் காய்ச்சல் இருப்பதும் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# ஜனாதிபதியின் இல்லத்தில் பணத்தை எண்ணிய இளைஞன் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 26 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதியின் இல்லத்தினை பொதுமக்கள் முற்றுகையிட்டதன் பின்னர், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


கொழும்பு 14, மல்மாவத்தையினைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த சந்தேக நபர் கொழும்பு ஹூசேனியா வீதியிலுள்ள கடையொன்றில் பணிபுரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பொதுமக்கள் அரச கட்டடத்தை முற்றுகையிட்டதன் பின்னர் காணப்பட்ட பணத்தை எண்ணிக் கொண்டிருந்த ஒருவரே இவர் என்பதும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# வன்முறையில் ஈடுபட்டவர்கள் வெளிநாடு செல்ல முடியாது

## அரச வேலையும் இல்லை என்கிறார் சரத்வீரசேகர



(கொழும்பு)

போராட்டம் எனும் பெயரில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் வெளிநாடு செல்ல முடியாது எனவும் அவர்களுக்கு அரச வேலையும் கிடையாது என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளில் ஈடுபட்ட பலரது கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டு அவை விமான நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல முடியாது. அதுமட்டுமல்லாது அரச தொழில் உட்பட தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளவும் முடியாதென சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், வன்முறைகளில் ஈடுபடுபவர்களே அவசரகால நிலை தொடர்பில் பயப்பட வேண்டும். சாதாரண ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் அது தொடர்பில் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாதென்றும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகிச் செல்லுமாறு கோரியே காலிமுகத்திடலில் ஆரம்பத்தில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அவர் பதவி விலகி அரசியலமைப்பின்படி புதிய ஜனாதிபதியும் தெரிவு செய்யப்பட்டார்.

எனினும், தமது நோக்கம் நிறைவேறிய பின்னரும் போராட்டம் தொடர்கிறது இது நியாயமற்றது எனவும் தெரிவித்தார். (நி)

# வேறு நோக்கங்களுக்காக அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படலாம்

### பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் அவசரகால சட்டம் அவசியமில்லை என்பதாலேயே அதற்கு எதிராக வாக்களித்திருந்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் சட்டத்துறை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவசரகால சட்டமென்பது நாட்டுக்கு அவசியமானது எனவும் அதனை அமுல்படுத்தும் போது தூரநோக்கு சிந்தனை இருக்க வேண்டும்.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத செயல்.

அத்துடன், அவசரகால சட்டம் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம் எனவும் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (நி)

# போதியளவு மருத்துவ பரிசோதனை இன்மையால் நோயாளர்களை அடையாளம் காண முடியாத நிலை

(கொழும்பு)

கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. போதிய மருத்துவ பரிசோதனை இல்லாததன் காரணமாக கொரோனா நோயாளர்களை இலகுவில் அடையாளம் காண முடியாத நிலை காணப்படுகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக மிகச் சிறியளவு எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்களே காணப்பட்டனர். ஆனால் நோய்த்தொற்று குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
>
> – அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை

வளர்த்த கடா மார்பில் பாய்ந்தால் அதன் வலி எப்படிருக்கும் என்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

இங்கு வலி என்பது உடல் வலியை மட்டும் குறிப்பதன்று. மாறாக, உளவலியையும் சுட்டுவதாகும்.

அதாவது ஆசையோடு வளர்த்த கடா நன்றி மறந்து வளர்த்தவரின் மார்பைப் பதம் பார்த்தால், அதன் வலி இரு மடங்கானது.

அப்படியானதொரு அவலம் யாருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது.

ஆனால் அந்த நிலைமை முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு ஏற்பட்டுவிட்டது.

ஆம், மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு எல்லா வழியிலும் குடைபிடித்த பீரிஸ், மகிந்த தரப்பு சொல்வதையெல்லாம் தட்டாமல் செய்து வந்தார்.

ஒரு பேராசிரியர் – ஒரு கல்வியாளர் எப்படியெல்லாம் இருக்கக்கூடாதோ அப்படியெல்லாம் அவர் இருந்தார்.

உண்மை மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் எடுபிடியாக இருந்த பேராசிரியர் பீரிஸ் இடையிடையே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதட்டலுக்கும் வெருட்டலுக்கும் ஆளாகியிருந்தார்.

ஒரு பேராசிரியர் எதற்காக இப்படியொரு மானம் இழந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்று சாதாரண மக்கள் நினைக்குமளவுக்கு பேராசிரியர் பீரிஸின் நிலைமை இருந்தது.

இது தவிர, ஓர் உயர்ந்த கல்வியாளரான அவர் இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட்டிருக்க வேண்டும்.

ஆனால் அதனைச் செய்யாமல், தமிழ் இனத்துக்கு எதிராக வெளிநாடுகளில் பொய்ப் பிரசாரம் செய்தார்.

2009இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பை மறைக்க ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொய்யுரை ஆற்றினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். நாட்டை கொள்ளையடிக்காதீர்கள் என்று மகிந்த தரப்பிடம் துணிந்து நின்று கூறமுடியாத பேராசிரியர் பீரிஸ், தர்மத்தை இழந்து, அறத்தைத் தொலைத்து கற்ற கல்வியின் மகிமையை மறந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்த துரோகம் கொஞ்சமல்ல.

அவ்வாறு மகிந்த தரப்பின் வஞ்சகத்தனத்துக்கு துணைபோன பேராசிரியர் பீரிஸ் இன்று மகிந்த ராஜபக்ஷவின் மொட்டுக் கட்சியால் ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

அதிலும் விசித்திரம் மொட்டுக்கட்சியின் தவிசாளர் என்ற பதவியில் இருந்த அவரை கட்சியினர் எவரும் மதிக்கவில்லை எனும் போது இதைவிட அவமானம் வேறுஎதுவாக இருக்க முடியும்.

இதுதான் பரவாயில்லை என்றால் இனி பேராசிரியர் பீரிஸ் மீது ஒழுக்காற்று விசாரணையை நடத்த மொட்டுக்கட்சி தயாராகியுள்ளதாம்.

என்ன செய்வது பதவிக்காக முதுகை வளைத்தால் முள்ளெலும்பு முறிபடும் என்பதற்கு பேராசிரியர் பீரிஸ் நல்லதோர் உதாரணம்.

# யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சட்டப்படி ரணிலே நாட்டின் ஜனாதிபதி

## பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படி ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு நாட்டின் ஜனாதிபதி எனவும் இரண்டு மாற்று வழிகளில் ஒன்றை மாத்திரமே அவருக்கு தெரிவு செய்ய நேரிடும் எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள நாட்டின் தற்போதைய பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்கான குறைந்தபட்ச பொது தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்கும் பரிந்துரைகள் அடங்கிய கடிதத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை பயன்படுத்தி இலங்கை அரசை வீழ்த்த முன்னெடுக்கப்பட்டுள்ள அனர்த்தமான ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு பலியாகாமல் இருக்க வேண்டும்.

எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தற்போது நீங்கள் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி இரண்டரை ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளீர்கள்.

எமது அரசியல் வாசிப்புக்கு அமைய நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இரண்டு மாற்று வழிகளில் ஒன்றை மட்டுமே தெரிவு செய்ய நேரிட்டுள்ளது.

முதலாவது அதிகரித்து வரும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அனர்த்தமான ஏகாதிபத்திய நடவடிக்கைகளில் இரையாகி இலங்கையை ஹெய்டி போன்ற நாடாக மாற்றுவது.

அதன் மூலம் இலங்கையின் வரலாறு முடிவுக்குவரும் என்பதுடன் உங்களது அரசியல் இருப்பும் ஆபத்துக்குள்ளாகும்.

இரண்டாவது இறுதி நேரத்திலாவது வரலாற்று தவறை திருத்திக் கொள்ள கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பிரயோசனப்படுத்தி நெருக்கடியை தீர்ப்பதற்காக சமூக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது தூரநோக்கான செயல்.

நீங்கள் நேர்மையாக இரண்டாவது வழி முறையை தெரிவு செய்யும் நிலைமையில், குறுகிய அரசியல் வாதவிவாதகள் இன்றி வரலாற்று மோதல்களை புதுப்பித்து கொள்ளாது அதற்கு வழி காட்ட நாங்கள் முன்வருவோம்.

இது நாட்டின் தேசிய சக்திகளுக்கு வரலாறு வழங்கியுள்ள பொறுப்பாக நாங்கள்கருதுகிறோம் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ம-7)

# போதைப்பொருளுக்காக 15 வயது தங்கையை விற்பனை செய்த அக்கா

(கொழும்பு)

1 கிராம் போதைப் பொருளுக்கும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கும் தன்னுடைய 15 வயது சகோதரியை ஹெரோயின் கடத்தல்காரருக்கு விற்ற சகோதரி கைது செய்யப்பட்டதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணம் மற்றும் ஹெரோயின் கொடுத்து சிறுமியை வாங்கிய ஹெரோயின் கடத்தல்காரரும் 5120 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சகோதரி 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் என்றும், இவர் போதைக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் சிறுமியின் தாய் சிறையில் உள்ளார். சிறுமியின் தாய் சிறைச்சாலைக்கு சென்ற பின்னர் குறித்த சகோதரியே சிறுமியை பராமரித்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேற்கு நில்பனாகொட பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபரின் வீடு சோதனையிடப்பட்டு 5120 மில்லி கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரின் வீட்டில் இருந்த சிறுமி யார் என்று பொலிஸ் அதிகாரிகள் கேட்டபோதே சிறுமி விற்கப்பட்ட விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. (ம-7)

# கோட்டா கோ கமவிலிருந்து வெளியேறும் முக்கிய அமைப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை ஆரம்பித்த கறுப்புத் தொப்பி இயக்கம், (Black Cap Movement with-draws) காலி முகத்திடலுக்கான தனது பங்களிப்பை நேற்று முதல் உத்தியோகபூர்வமாக நிறைவு செய்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவைத் தொடர்ந்து, காலி முகத்திடல் போராட்டத் தளத்தை ஆக்கிரமிப்பு செய்வதில் எந்தக் காரணமும் இல்லை என அந்த இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (ம-7)

# தொடருந்துகளுக்கான முன்பதிவுக் கட்டணங்கள் ஆகஸ்ட் முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

தொடருந்துகளுக்கான முதல் வகுப்பு இருக்கை அனுமதிச்சீட்டுக்களுக்கான முன்பதிவுகள் மற்றும் கடுகதி தொடருந்துகளுக்கான முன்பதிவு செய்யப்படாத கட்டணங்கள் ஆகஸ்ட் முதலாம் திகதி நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ளன.

இந்தநிலையில் கட்டண திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கோட்டை தொடருந்து நிலையத்தில் உள்ள நிலைய அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முன்னதாக, தொடருந்து இருக்கை முன்பதிவு கட்டணம் ஒரு மாதத்திற்கு முன்னரும் கணிசமான சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# இரு ஆலோசகர்கள் ஜனாதிபதிக்கு நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு சிரேஷ்ட ஆலோசகர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதியின் (ஊடகங்கள்) சிரேஷ்ட ஆலோசகராக பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதியின் (சர்வதேச ஊடகங்கள்) சிரேஷ்ட ஆலோசகராக பேராசிரியர் ஷேனுகா செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் மத்துமபண்டார, களனிப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தராகவும் சமூகவியல் துறையின் பீடாதிபதியாகவும் பொருளாதாரப் பிரிவின் தலைவராகவும் செயற்பட்டுள்ள அதேவேளை, பேராசிரியர் செனவிரத்ன, ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகராகவும் இலங்கைத் தூதுவராகவும் செயற்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கொம்பனில் காவல் பிரிவு அமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முக்கொம்பனில் பொலிஸ் காவல் பிரிவினை அமைக்குமாறு முக்கொம்பன் மது ஒழிப்புக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக முக்கொம்பன் கிராமத்தில் அதிகரித்த சட்டவிரோத மது உற்பத்தி காரணமாக குடும்ப வன்முறைகள், சமூக வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் முக்கொம்பன், 150 வீட்டுத் திட்டம், 65 வீட்டுத் திட்டம், நேரடம்பன், அரசபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி முக்கொம்பனில் பொலிஸ் காவல் பிரிவு ஒன்றினை உருவாக்குமாறு முக்கொம்பன் கிராம மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-350)

# நாளை பெற்றோல் விநியோகிக்கப்படும் நிரப்பு நிலையங்கள் விபரம்

சாவகச்சேரி ப.நோ.கூ.ச., யாழ்ப்பாணம் லிவர்பூல்ஸ் நெவிக்கேஷன், மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.ச., தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச., யாழ்ப்பாணம் ராஜன் உமா ஜல், பருத்தித்துறை ப.நோ.கூ.ச., நல்லூர் ப.நோ. கூ.ச., சுன்னாகம், என்.எஸ்.நாகலிங்கம் அன் சன், சுன்னாகம் கமலாதேவி கதிராசம்பிள்ளை, மருதனார்மடம் எஸ்.தர்மவரதன், கைதடி கே.எஸ். பொன்னம்பலம் அன் சன், யாழ்ப்பாணம் முருகேசு குணரட்ணம், கிளி.வாடியடி பூநகரி பா.நோ.கூ.ச., கிளி.ஏ9 வீதி யுனைடெட், பளை எவர் பிறே என்டர்பிறைசர்ஸ், இயக்கச்சி ஆழ்வாப்பிள்ளை சாந்தரூபன், முருங்கன் எஸ்.அன்ரன், மன்னார் மாந்தை மேற்கு ப.நோ.கூ.ச, மடு.தேவாலயம், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.ச, விசுவமடு பாமர்ஸ் ப.நோ.கூ.ச, முள்ளியவளை கே. மகேந்ரன், வவு.தெற்கு ப.நோ.கூ.ச, வவுனியா ஏ.எம். தனநாயகம், வவுனியா சண்முகம் ஆன்ந்தராஜா, வவுனியா ரத்னா நிரப்பு நிலையம்.

# சேவையை ஆரம்பித்தது யாழ்.ராணி புகையிரதம்




(தருமபுரம்)

காங்கேசன்துறை முறிகண்டி வரை சேவையில் ஈடுபடும் யாழ்.ராணி புகையிரதம் நேற்று முதல் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய புகையிரதப் பெட்டிகளுடன் தனது சேவைகளை ஆரம்பித்தது.

காங்கேசன்துறையிலிருந்து அதிகாலை 6 மணிக்கு தனது பயணத்தை தொடங்கி முறிகண்டி வருகை தந்த புகையிரதம் மீண்டும் முறிகண்டியில் இருந்து காலை 8.30 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

(4-316)



பனிப்புலம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர் வெள்ளோட்டத் திருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்- கஜிந்தன்)

# வில்லூன்றியில் ஆடி அமாவாசை



(குப்பிழான்)

ஆடி அமாவாசை விரத தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை காலை பூசை வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்திலிருந்து பூரண கும்பம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் காலை 8.15 மணியளவில் தீர்த்தவாரி இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான அன்பர்கள் தீர்த்த சங்கற்பம் செய்து கொண்டு வில்லூன்றி புனித தீர்த்தக் கேணியில் நீராடி காலமான தமது தந்தையருக்காகச் சிவாச்சாரியர்கள் முன்னிலையில் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொண்டனர். (4-18)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 23 சூரி 12 செவ் 11 இல்<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்: விளையாட்டுத்துறைஅலுவலகர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ: B/12841 | பிறப்பு: 2003 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 6 இல்<br>தகைமை/ தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்.<br>தொ.இ: G/12861 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 12 சூரி 12 செவ் 10 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/12842 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: சூரி 2 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/12863 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: சூரி 3 செவ் 1 இல்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்: A/L, IATA Operations Manager Online (Dubai)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/12843 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: சூரி 6 செவ் 7 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: ஆசிரியர்(அரச)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12864 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் : கார்த்திகை 2<br>கி.பா: சூரி 12 செவ் 3 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: Practice Manager (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு : படித்த பெண்<br>தொ.இ: B/12844 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 16 சூரி 7 செவ் 5<br>உயரம்: 157cm<br>தகைமை/ தொழில்: BSc (Hons) in Software Engineer Project Assistant<br>எதிர்பார்ப்பு : பல்கலைக்கழகம். அரச தொழில்.பொறியியலாளர். தொழில்நுட்ப உத்தியோகத்தர். வங்கியாளர்<br>தொ.இ:G/12866 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கமநல சேவை பிரிவிற்குட்பட்ட காரைநகர் தென்மேற்கு கமக்காரர் அமைப்பிற்கான வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் காரைநகர் வியாவில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கமக்காரர் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கமக்காரர் அமைப்பின் செயலாளர் க.விக்கினேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 240 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 500 | 550 |
| தக்காளி | 300 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 350 | 350 | 200 |
| கோவா | 360 | 350 | 300 | 350 |
| கரட் | 280 | 380 | 370 | 440 |
| பூசணி | 200 | 180 | 180 | 180 |
| புடோல் | 160 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 700 | 400 | 600 | 500 |
| வெண்டக்காய் | 120 | 200 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 250 | 200 | 280 |
| பயற்றங்காய் | 250 | 400 | 300 | 600 |
| லீக்ஸ் | 260 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 280 | 200 | 220 | 280 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 350 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 420 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 280 | 200 | 200 | 400 |
| முள்ளங்கி | 160 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக செயற்...

புப் பிரிவுக்குள் நுழைவதற்கு முன்னர் அவர் சமூக ஊடகங்களில் நேரலை காணொளி ஒன்றையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## QR முறையில்...

விநியோகிக்கும் அளவு தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரம் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## +131 தொற்று...

காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 665, 379ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## ஆற்றல்மிக்க...

கும் நோக்கம் கொண்டவை எனவும் பொது அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வட மாகாண பேரவைச் செயலாளர் பா.செந்தில்நந்தனன், வட மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமாரன், வட மாகாணக் கட்டடத் திணைக்களத்தின் பணிப்பாளர் க.மோகனதேவன் ஆகியோர் அவரவர் பதவியில் இருந்து ஆளுநரால் நீக்கப்பட்டிருந்ததை அடுத்தே வட மாகாண பொது அமைப்புகள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் நடவடிக்கைகள் மீது அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஆளுநரின் மேற்போந்த நடவடிக்கை தொடர்பில் பொது அமைப்புகள், தமிழ் அரசியல் தரப்புகள் விரைவில் கூடி ஆராயவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## சுதந்திரக்...

ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பேச்சுவார்த்தையில் தற்போது சாதகமான பக்கம் ஒன்று தெரிவதாகக் கூறியுள்ளார்.

அந்த விடயங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன் காரணமாகவே, இரண்டு வாரங்களில் தங்களது பாராளுமன்றக் குழுவைச் சந்திக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி கூறியதாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ம-7)

## பாராளுமன்றம்...

க்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடர் எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10.30க்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## நீதி, சட்ட ஆட்சி...

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் உட்பட பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல் மற்றும் மீளக்கட்டியெழுப்புதல் என்பவற்றுக்காக நீதிக்கான அணுகல், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை நிலைநிறுத்துதல் அவசியமாகும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமராக தினேஷ் குணவர்த்தன பதவியேற்றுள்ள நிலையில், அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இந்தச் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

பிரதமருடனான சந்திப்பு தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்துள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த டுவிட்டர் பதிவில்,

"இந்த சவாலான காலகட்டத்தில் அமெரிக்கா இலங்கை மக்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்ற வழிமுறைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்தேன்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும்போதும், நீதிக்கான அணுகல், சட்டத்தின் ஆட்சி என்பவற்றை நிலைநிறுத்துவது அவசியமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து, "மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து , மக்களின் அபிலாஷைகளுக்கு செவி சாய்க்கும் நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்கும்" எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 21 பேர்...

தனிஸ் அலி உட்பட 21 பேர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளது.

இதேவேளை, டுபாய் செல்ல முயன்றவேளை விமானத்துக்குள் வைத்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட தனிஸ் அலி எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## ஐ.நா மனித...

ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நிதி அமைச்சில் நேற்று சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் பின்னர் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்ப மனித உரிமைகளையும் உரிய செயற்பாடுகளையும் மதித்து, அமைதியான, ஜனநாயக மற்றும் வெளிப்படையான செயற்பாடுகள் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தேர்...

சுமங்கல தேரரை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது மல்வத்து பீடத்தின் சிரேஷ்ட சங்க உறுப்பினர் தொரணேகம இரத்தினபால நாயக்க தேரர், நாட்டின் அபிவிருத்திக்காகவும், மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காகவும் அரசியல்வாதிகளால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட

வில்லை எனத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பதவிகளை வகிப்பவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்பதால் தேர்தலுக்கு அழைப்பது மிகவும் பொருத்தமானது என தேரர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் வரிசைகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க வேண்டியிருப்பதால், எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடிக்கு தீர்வு காண தேசிய அரசாங்கத்தை 6 மாதங்களுக்குள் அமைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா ஆரம்ப அழைப்பு விடுத்துள்ளார்.

மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த மன சுதந்திரமும், சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். (ம-7)

## சுமந்திரன் கண்டனம்

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறையில் அடைக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியிலுள்ள தனது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7)




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனை விட தெற்கு பயங்கரவாதம் பாரிய அழிவை நாட்டில் ஏற்படுத்தியுள்ளது

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

பிரபாகரனைவிட தெற்கு பயங்கரவாதம் பாரிய அழிவை நாட்டில் ஏற்படுத்தி இருக்கின்றது. அவ்வாறானதொரு நடவடிக்கையை மீண்டும் ஏற்படுத்தவே போராட்டம் மூலம் முன்னெடுக்கப்படுகிறது.

அதற்கு நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது. அத்துடன் மக்கள் பலத்துடன் அதிகாரத்துக்கு வரமுடியாத மறைமுக அரசியல் சக்திகள் இந்த போராட்டத்துக்குள் மறைந்திருக்கின்றன. இது பாரிய நிலைமையாகும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், மக்கள் ஆணைமூலம் அதிகாரத்துக்கு வரமுடியாத மறைமுக அரசியல் சக்திகள் போராட்டத்துக்குள் மறைந்திருக்கின்றன.

இது பயங்கரமான நிலைமையாகும். போராட்டத்துக்குள் பயங்கரவாதிகளும் நுழைந்திருக்கின்றனர். உண்மையான போராட்டக்காரர்களின் தலைவர்களுடன் நான் கலந்துரையாடி இருக்கின்றேன் என்றார்.

(ம-7)


## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4659)

எமது கிளைகள்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-4659)




Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## வாடகைக்கு

பருத்தித்துறை கிராமக்கோட்டு சந்தியில் உள்ள
**SS Complex** இல்
1650 சதுர அடி பரப்பளவு உள்ள சகல உட்கட்டமைப்புகளுடனான Foodcity மற்றும் 2 ஆம் மாடியில் உள்ள 7700 சதுர அடி பரப்பு உள்ள Hall (புடைவைக் கடை, Beauty Parlour, Phone Shop போன்றவற்றிற்கு ஏற்றது) வாடகைக்கு உள்ளது.

**021 226 5000**
**077 779 5904**
(C-4669)



## வேலை வாய்ப்பு

யாழில் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு இலத்திரனியல் அறிவுடைய தொழில்நுட்ப உதவியாளர்கள் தேவை.
(இருபாலாரும்)
நேர்முகத் தேர்வு : 29.07.2022
காலை 9.30-2.30 மணி மட்டும்
124, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(12283)

**076 373 9832**



## காணவில்லை



யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதி இலக்கம் 7 இல் சிகிச்சை பெற்றுவந்த கந்தையா விக்னேஸ்வரமூர்த்தி (வயது -75) என்ற முதியவரை நேற்றிலிருந்து காணவில்லை. இம் முதியவரைக் கண்டவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு அறியத் தரவும்.
(12287)

**077 598 4657**
**076 187 0011**



## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 66 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- ❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- ❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- ❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- ❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- ❖ யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

(12277)

பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**



## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

### நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

யாழ். மண்ணில் 08 வருட கால
நம்பிக்கையை வென்ற

# இந்தியன் செலக்ஷனின்

# ஆடி மாத

# ஆடித் தள்ளுபடி





இவ்வருடமும் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், வைபவங்களுக்கான சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

காலம் : 29.07.2022
வெள்ளிக்கிழமை முதல்
08.08.2022 வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)



இடம் : வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்

(12282)



## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள்

# நினைவலைகள்

மண்ணில்
1934 - 10 - 29



விண்ணில்
2022 - 06 - 29

### அமரர் இராமலிங்கம் நல்லம்மா

2022.06.29ஆம் திகதி புதன்கிழமை பூர்வபக்க பிரதமை திதியில் இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவிக்கு எமது இதய அஞ்சலிகள்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் பாசம்
எந்நாளும் உயிர்வாழும்

மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்
எம் நெஞ்சில் இருப்பீர்கள்
எந்நாளும் நினைவாக

520, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(12284)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.